Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபாற்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 10
இதழ் 126
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கீலக ஆனி 3 ரபி: அவ் 19 ஞாயிற்றுக்கிழமை (16-6-68)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்

# அரிசி இறக்குமதியில் 50,000 தொன் வெட்டு

## உணவு உற்பத்தி இயக்கத்தின் பயன்

கொழும்பு, சனி

அரசாங்கத்தின் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் நல்ல பயன் அளித்திருக்கிறது. இவ்வருடம் நெல் விளைச்சல் அதிகரித்துள்ளதால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியில் 50,000 தொன் குறைக்கப்பட்டுள்ளது.

வருடம் மூன்று லட்சம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுவந்தது. உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கம் அளித்துள்ள வெற்றி காரணமாக இவ்வருடம் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் தொன் அரிசிமட்டுமே இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

## சமரக்கொடி வருகிறார்

உடுப்பிட்டி, சனி

புரட்சிவாத சமசமாஜக் கட்சித் தலைவர் திரு. எட்மண்ட் சமரக்கொடி எம்.பி. அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வருகிறார். இம்மாதம் 25-ம் திகதி நெல்லியடியில் நடைபெறவிருக்கும் வடமராட்சி சமசமாஜ வாலிப முன்னணியின் விசேட கூட்டத்தில் கலந்துகொள்ளும் இவர், இன்றைய அரசியல் நெருக்கடிபற்றிப் பேசுவார் எனத் தெரிகிறது.

## குளத்துநீர் பரிசோதனைக்கு?

உடுப்பிட்டி, சனி

கரவெட்டியிலுள்ள குளத்துநீர் பரிசோதனைக்காகத் தென்னிலங்கை கொண்டு செல்லப்பட்டது. கரவெட்டி மேற்கு கனுவிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைகளை ஆராயும்பொருட்டு இங்கு விஜயம் செய்திருந்த போக்குவரத்து அமைச்சரின் அனுராதபுர மாவட்டக் காரியதரிசி இங்குள்ள குளத்துநீர் அசுத்தமாகவிருப்பதால் தொற்றுநோய்கள்பரவக்கூடுமென்று அச்சம் தெரிவித்ததால்தான் இவ்விதம் நீர்பரிசோதனைக்கு ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிகிறது.

## மூவர் போட்டி

குரும்பசிட்டி, சனி

மயிலிட்டி கிராமசபையின் தலைவர் பதவிக்கு திரு. வ. இராசநாயகம் (தமிழரசுக்கட்சி) திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் (தமிழ்க்காங்கிரஸ்கட்சி) திரு. வ. கிருஷ்ணசாமி ஆகிய மூவர் போட்டியிடுகின்றனர். இத்தேர்தல் [illegible] மாதம் 10-ந் திகதி நடைபெறும் எனத் தெரிகிறது.

## 3328 பஸ்விபத்துக்கள் 135 உயிர்கள் பலி

கொழும்பு, சனி

சென்ற வருடத்தில் மட்டும் இலங்கை போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான 3328 பஸ்கள் விபத்துக்களில் சிக்கின. இந்த விபத்துக்களில் 135 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபரங்கள் பொலிசாரின் சென்ற வருடத்தின் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளன.

## வல்லையில் துப்பாக்கிச்சூடு; எவருக்கும் காயமில்லை

வல்வெட்டித்துறை, சனி

காரில் வல்லைவெளிநோக்கிச் சென்றுகொண்டிருந்த நால்வரைநோக்கித்துப்பாக்கிச் சூடுவிழுந்ததாம். அதைத்தொடர்ந்து காரை நிறுத்தி காரினுள்ளிருந்தவர்களில் ஒருவர் 'றிவோல்வரால்' அவர்களைத் திருப்பிச் சுட்டாராம். இச்சம்பவம் இன்றுகாலை தொண்டமானாறு நாதன் வைத்தியசாலைக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

வல்லை நெசவு நிலையத் தலைவர் திரு. இராஜசேகரம், திரு. ஞானமூர்த்தி. ஸ்ரீபத்மநாதன், இரத்தினலிங்கம் முதலியோர்தொண்டமானாற்றிலிருந்து காரில் சென்றுகொண்டிருந்தாகவும், ஒரு விசில் சத்தத்தைத்தொடர்ந்து காட்டுப் பக்கத்திலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் அதைத்தொடர்ந்து செல்வச்சந்நிதி கோயில் பக்கமாக ஓடியவர்களை திரு இராஜசேகரம் தாம் வைத்திருந்த றிவோல்வரால் சுட்டதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

ஓடியவர்களில் ஒருவர் மீண்டும் ஒருமுறை சுட்டதாகவும் அவர்களுக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லையெனவும் தெரிகிறது.

இதுபற்றி வல்வெட்டித்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் ஸ்தலத்திற்குச்சென்று விசாரணை நடத்தினர். உடுப்பிட்டி—வல்லை நெசவுநிலைய சம்பவத்தையொட்டியே இச்சம்பவம் நடந்திருக்கலாமெனப் பொலிசார் கருதுகின்றனர். இதுசம்பந்தமாக எவரும் கைதாகவில்லை.

## ஆட்சிமன்றத்தின் புதிய கூட்டத்தொடர்

### ஜூலை 7-ந் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, சனி

ஆட்சிமன்றக் கூட்டத்தொடர் இம்மாதம் 21-ந் திகதி கலைக்கப்படுமென்றும் அடுத்த கூட்டத் தொடர் அடுத்தமாதம் 7-ந் திகதி ஆரம்பமாகுமென்றும் அறியப்படுகிறது.

மாவட்டசபை வெள்ளையறிக்கைமீதுவிவாதம் நடைபெற்று முடிந்ததும் ஒத்திவைக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபை மீண்டும் இம்மாதம் 18-ந் திகதி கூடவிருக்கிறது. இதுவே இக்கூட்டத் தொடரின் கடைசிக்கூட்டத்தொடராகவிருக்கும், ஜூன் 21-ந் திகதி ஆட்சி மன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டபின் புதிய கூட்டத்தொடர் ஜூலை 7-ந் திகதி கூடும். இக்கூட்டத்தொடர் கலைக்கப்பட்டதும் பல மசோதாக்கள் காலாவதியாகிவிடும்.

புதிய கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்துகவர்னர் ஜெனரல் நிகழ்த்தும் சிம்மாசனப்பிரசங்கத்தில் மாவட்ட சபைகள் அமைப்பதுபற்றியும் முக்கியமாகக் குறிப்பிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சைகோன்மீது ரொக்கட் தாக்குதல் பயமுறுத்தல்

சைகோன், ஜூன் 5

தென்வியட்னாம் தலைநகரான சைகோன் மீது நாள் ஒன்றுக்கு 100 ரொக்கெட்டுகள் வீதம் 101 நாட்களுக்கு தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல் நடத்த வியட் காங்கியர் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சைகோனிலிருந்து செல்வந்தர்களும் பெரும் வர்த்தகர்களும் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

வியட் காங்கியர் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் வடவியட்னாம் மீது அமெரிக்கா மீண்டும் குண்டு வீசித் தாக்குவதற்கு ஆரம்பிக்குமா என்பதுபற்றி இன்னும் தெளிவான தகவல் கிடைக்கவில்லை.

இதேசமயம் பாரிஸில் நடைபெறும் வியட்னாம் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ளும் வடவியட்னாமிய தலைமைப் பிரதிநிதி ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் வியட்னாம்மீது குண்டு வீசுவதையும், இதர யுத்த நடவடிக்கைகளையும் அமெரிக்கா முற்றாக நிறுத்திக் கொண்டாலொழிய வியட்நாமில் சமதானம் ஏற்படமுடியாதென்று தெரிவித்திருக்கிறார்.

## பகைநாகர்-பர்மா துருப்புக்கள் மோதல்

### 15பேர் மாண்டனர் 20 பேர் பலி

புதுடில்லி, ஜூன் 15

நாகாலாந்தில் சமீபத்தில் பகைநாகர்களுடன் ஏற்பட்ட சண்டையின்போது கொல்லப்பட்ட பகை நாகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜுகள், நாட்குறிப்புகள், ஆயுதங்கள் ஆகியவற்றை இந்திய ராணுவ அதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர். இத்தடயங்களிலிருந்து பகைநாகர் சிலர் சீனாவில் இராணுவப் பயிற்சிபெற்றுத் திரும்பியதுடன் அவர்கள் அங்கிருந்து ஆயுதங்கள் கொண்டு வந்திருப்பதாகவும் அவர்கள் மற்றைய நாகர்களுக்கும் பயிற்சியளித்துவருவதாகவும் கருதுகின்றனர்.

இதற்கிடையில் ரங்கூனிலிருந்து வந்த செய்தியொன்று இம்மாதம் 10-ம் திகதி பகை நாகர் கோஷ்டியொன்றுக்கும் பர்மா எல்லைரோந்துக் காவல் குருப்புகளுக்குமிடையில் நேர்ந்த கைகலப்புஒன்றில் பதினைந்து பகைநாகர் கொல்லப்பட்டதாகவும் 20 பேர் காயடைந்ததாகவும் தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமையாளர் தேவை

உரும்பராய் ஐக்கிய பண்டசாலை சங்கக்கடைக்குக் கூட்டுறவு வித்தியாசாலையில் பூரண பயிற்சி பெற்ற ஓர் முகாமையாளர் தேவை. 22-6-68க்கு முன் செயலாளருக்கு விண்ணப்பிக்கவும். 837

## தேவை

அல்லைப்பிட்டி ப. நோ., கூ. சங்கத்திற்கு ஒரு மனேச்சரும், மண்கும்பான் டிப்போவிற்கு ஒரு மனேச்சரும் தேவை. 25-6-68 திகதிக்கு முன் சங்கத் தலைவருக்கு விண்ணப்பிக்கவும்.

சம்பளம்: முறையே பஞ்சப்படி உட்பட ரூபா 100, 70, (சேவை நலன் கருதி சம்பளம் கூட்டப்படும்.)

வயது: 21 — 45 இடையிலுள்ளவர்கள்.

கல்வி: சிரேஷ்ட தராதரப்பத்திரமுடையவர்கள். (கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் விரும்பத்தக்கது.)

பிணை: ரொக்கப்பிணை 1000/-, ஆதனப்பிணை 2000/-.

சி. இரத்தினசபாபதி,
தலைவர்.

அல்லைப்பிட்டி. 781

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 16-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அல் 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 தனிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இல்லாமியகேதங்கள்.

344 மீற்றர் அல் 49 மீற்றர் பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 மாதர் கேட்டவை.

344 மீற்றர் அல் 61 மீற்றர் மாலை 5-00 பிறந்தநினைவாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 நேயர்விருப்பம், 6-45 மாவளம், 7-00 கத்தோலிக்கநிகழ்ச்சி, 7-30 பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி — எம். ஏ. கிருஷ்ண பாகவதர்.

## உண்டியல் களவு

புன்னாலைக்கட்டுவன், சனி அத்திரான் முருகமூர்த்தி ஆலய உண்டியல் நேற்றிரவு உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வித திருட்டுகள் வடமாட்சிப் பகுதியிலுள்ள பல கோவில்களில் நடப்பதாக அறியப்படுகிறது.


கைத்தறி
நெசவாளர்களுக்கு
ஓர் அறிவித்தல்

உங்களின்
கைத்தறிகளில்
தயார்செய்யும்ஜவுளிகளை
நியாயமான விலைகளில்
எம்மிடம்
விற்பனை செய்யலாம்.

S. R. S.
ஜவுளி மாளிகை
216, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
போன் : 296


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வீடு:

கொக்குவிலில் நான்கு அறைகள் கொண்ட புதிய வீடு நான்கு பரப்பில் குளாய்த் தண்ணீர் மின்சக்திவசதியுடன் றெயில்வேஸ்ரேசன், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம், தபால்கந்தோர், பஸ் நிலையம் ஆகிய மத்தியில் விற்பனைக்கு இருக்கிறது. விபரத்திற்கு அ. செல்வரத்தினம், கொக்குவில். 1565

கார்:

நல்ல நிலையிலுள்ள E N. தொடர்பிலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் மாலை நேரத்தில் பார்வையிடலாம். விபரங்களுக்கு. ச. பஞ்சரத்தினம், உரும்பிராய் சந்தி. 1564

### தேவை

"கணக்குகள் பதிவதிலும், நிர்வாக அனுபவம் வாய்ந்த சைவக் கணக்காளர் தேவை. கல்வியறிவு, தகைமை, வயது ஆகியாம் விபரங்களோடு 20-6-68க்கு முன் D. S. N. C/o வே. பூபாலசிங்கம் கிஷ்ண பவனம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை என்ற விலாசத்துக்கு மனுப்பண்ணுக. 1371

## ச. ச. நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு கந்தரமடம் முற்போக்கு சனசமூகநிலையத்தின் முதலாவது ஆண்டுவிழா சங்கத்தலைவர் திரு. எஸ். இராசு தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் கே. டானியல், ஆ. துரைராசசிங்கம், வி. ஏ. கந்தசாமி, க. முருகரத்தினம் ஆகியோர் விழாவில் உரை நிகழ்த்தினார்கள். திரு. சி பூவிலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினார். [கா. நி.]

## புதிய அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திரு வேணன் அபயசேகரா அடுத்த மாதத்திலிருந்து தபால்மா அதிகாரிகாக பதவிஉயர்வு பெற்றுச் செல்வதால் புதிய யாழ் மாவட்ட அரசாங்க அதிபராகத் திரு. எம். திசநாயக்கா நியமிக்கப்படலாமெனத் தெரிகின்றது. தற்போது விற்பனை இலாகா கமிஷனராகக் கடமையாற்றும் திரு. திசநாயக்கா ஜூலை முதலாம் திகதியிலிருந்து இப்புதிய பதவியை ஏற்கக்கூடும். [கா. நி.]

## 'மாவட்டசபை' பற்றி உரை

யாழ்ப்பாணம், ஞாயிறு சுன்னாகம் பட்டினசபை நூல் நிலைய அரங்கில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் இன்று மாலை "மாவட்டசபை" பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார். மேற்படி நூல் நிலைய ஆராய்வுக் குழுவின் ஆதரவில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு வி. சிவசுப்பிரமணியம் தலைமை வகிப்பார். [கா. நி.]

## அம்புலன்ஸ்— கார் மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இராணுவ அம்புலன்ஸ் வண்டியொன்றும், காரொன்றும் நேற்றுக் காலை மோதியதால் கார் பலத்த சேதத்திற்குள்ளானது. எவரும் காயமடையவில்லை. [கா. நி.]

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள 37-ம் இலக்க இல்லத்தில் இன்று கவியோகி சுத்தானந்த பாரதியாரால் சாதனை நடத்தப்படும்.

## புதிய உறுப்பினர்

அளவெட்டி, சனி யாழ். அரசினர் ஆஸ்பத்திரி ஆலோசனைச் சபையின் புதிய ஓர் உறுப்பினராக திரு. எஸ். ஏ. சி வடிவேலு ஜே. பி. நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வார். ஜூன் 15 மத்திய பிரதேசத்தில் கல்வார் ஜில்லாவில் ஒரு பாலத்தின்மீது சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்று பாலச் சுவரில் மோதி ஆற்றில் விழுந்ததில் பதினொருபேர் மாண்டனர். 43 பேர் காயமடைந்தனர்.





எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்
AGENTS
றோயல் டிஸ்பென்ஸறி
PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்னடி கொலைநோக்கம், சதி பற்றி ஆராய 23 பேர் கொண்டகுழு நியமனம்

## உளவு இலாகாவினரும் உதவி அளிப்பர்

வாஷிங்டன், ஜூன் 15

செனட்டர் ரொபர்ட்கென்னடியின் கொலைசம்பந்தமாக பூரண விசாரணை செய்து அக்கொலைக்கான காரணங்கள், அதற்கான சதி முயற்சிகள் நோக்கங்கள், இதில் வெளியாரின் தொடர்பு பற்றி ஆராய்ந்தறிவதற்கென இருபத்தி மூவர் கொண்ட குழு ஒன்றை அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் நியமித்துள்ளார்.

பல்வேறு துறைகளையும் சேர்ந்த 23 பேர் இக்குழுவில் அங்கம்வகிப்பர்.

ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா ஆகிய நாடுகளின் விவகாரங்களையும், பல்வேறு மொழிகளையும் நன்கு அறிந்தவர்களும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவின் விசாரணைக்கு அமெரிக்க இரகசிய சேவையினரும் அமெரிக்க உளவிலாகவினரும் உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பர்.

செனட்டர் ரொபர்ட் கென்னடியின் சகோதரரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான திரு. ஜோன். எப். கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டதும் அக் கொலை பற்றி ஆராய திரு வாறன் என்னும் நீதிபதி தனிநபர் கமிஷனாக நியமிக்கப்பட்டதும் அவரது அறிக்கைமீது பின்னர் சர்ச்சை நடந்ததும் குறிப்பிடத்தக்கது.

# மேற்கு பேர்லின் மக்களின் நடமாட்டத்துக்கு கி.ஜேர்மன் தடை

## சோவியத் யூனியனிடம் மூவல்லரசுகள் ஆட்சேபம்

லண்டன், ஜூன் 15

மேற்கு பேர்லினிலுள்ளவர்கள் கிழக்கு ஜெர்மனிக்கு வந்து செல்வதற்கு கிழக்கு ஜெர்மன் அரசாங்கம் விதித்துள்ள புதிய தடைகள் சம்பந்தமாக பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய மூன்று அரசுகளும் சோவியத் யூனியனிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

லண்டனிலுள்ள சோவியத் ஸ்தானிகரை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து, பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மேற்கு பேர்லினர்களின் போக்குவரத்துக்கு கிழக்கு ஜெர்மன் அரசாங்கம் விதித்துள்ள புதிய தடைகள் பற்றிக் கவலையும் ஆட்சேபமும் தெரிவித்தார்.

மேற்கு பேர்லின் மக்களின் சுதந்திரத்தையும் அவர்களின் சுதந்திர நடமாட்டத்தையும் பாதுகாப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அவைகளெல்லாவற்றையும் மேற்கொள்வதற்கு பிரிட்டன் உறுதிபூண்டிருக்கிறது என்று பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர், சோவியத் ஸ்தானிகரிடம் தெரிவித்தார்.

பேர்லின் மக்களின் நடமாட்டத்துக்கும் தகவல் தொடர்புக்கும் சோவியத் யூனியன் மீது பொறுப்பும் கடமையுமிருக்கின்றதென்றும் பிரிட்டன் தெரிவித்திருக்கிறது.

### பிரெஞ்சும் ஆட்சேபம்

மேற்கு பேர்லின் மக்கள் கிழக்கு ஜெர்மன் மக்களுடன் தொடர்பு கொள்வதைத் தடைசெய்வது சம்பந்தமான கிழக்கு ஜெர்மன் அரசாங்கத்தின் புதிய நடவடிக்கைகளை பிரெஞ்சு அரசாங்கமும் ஆட்சேபித்திருக்கிறது. பாரிசிலுள்ள சோவியத் தூதர் ஸோரினை அழைத்துபாரிஸ் வெளிவிவகார அமைச்சர் தமது அரசாங்கத்தின் ஆட்சேபத்தைத் தெரிவித்தார். மேற்கு பேர்லின் மக்கள் கிழக்கு பேர்லின் மக்களுடன் தொடர்புகொள்வதற்கு சுதந்திரம் இருப்பதற்கு உத்தரவாதமளிக்கும் பொறுப்பு சோவியத் யூனியனுக்குண்டு என்று பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

## யுதாண்ட்-ரஸ்க் ஆலோசனை

நியூயோர்க், ஜூன் 15

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. டீன் ரஸ்க் நேற்று நியூயோர்க்குக்கு டீர் விஜயம் செய்து ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டைச் சந்தித்துச் சுமார் இரண்டரை மணி நேரம் பேசினார். இப்பேச்சுவார்த்தைகளில் ஐ. நா.விலுள்ள அமெரிக்க தலைமைப் பிரதிநிதி திரு. ஆதர் கோல்ட் பர்க்கும் கலந்து கொண்டார்.

பாரிசில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வியட்னாம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாகவே திரு. டீன் ரஸ்க்கும் யுதாண்டும் பேசியதாக தெரிகிறது.

சோவியத் உதவி வெளிவிவகார அமைச்சர் திரு. குஸ்நட்ஸோவையும் திரு டீன் ரஸ்க் சந்தித்துப் பேசினார்.

## பீகாரில் மாணவர் கலகம்

பாட்னா, ஜூன் 15

பீகாரில் ஒரு பரீட்சை நிலையத்தின்முன் மாணவர்கள் வன்முறை ஆர்ப்பாட்டம்நடத்தியபொழுது அதை அடக்குவதற்காக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ய நேர்ந்தது. இதில் ஒரு மாணவன் கொல்லப்பட்டான். பொலிசார் மீது கற்களையும் மற்றும் பொருள்களையும் மாணவர்கள் வீசியதில் பொலிஸ் அதிகாரிகள் சிலர் காயமடைந்தனர். இப்பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## எண்ணெய்க் கப்பல் பிளந்து கடலில் தீ

நேட்டால், ஜூன் 15

இந்துமா சமுத்திரத்தில் தென்னாபிரிக்க நகரான நேட்டாலுக்குச் சமீபத்தில் லைபீரிய எண்ணெய்க் கப்பல்ஒன்று கடல் கொந்தளிப்பிலும் புயலிலும் அகப்பட்டு இரண்டாகப் பிளந்தது இதிலிருந்த 35 பேர்களில் ஒன்பதுபேர் மாண்டனர். நான்கு சடலங்கள் மீட்கப்பட்டன. கப்பலிலிருந்த எண்ணெய் கடலில் கலந்து [illegible] தீ மின்னலாக கடலில் தீப்பற்றியது.

## சோவியத் வெளிவிவகார உதவிமந்திரி - ரஸ்க் சந்திப்பு

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு டீன் ரஸ்க் நேற்று நியூயோர்க்குக்கு திடீர் விஜயம் செய்தார். நியூயோர்க்கில் சோவியத் உதவிவெளிவிவகார அமைச்சர்திரு குஸ்நட்ஸோவை சந்தித்துச் சுமார் ஒன்றரை மணி நேரம் பேசினார். மேற்கு பேர்லின் மக்கள் கிழக்கு ஜெர்மன் சென்று வருவதற்கும் அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் கிழக்கு ஜெர்மன் அரசாங்கம் விதித்துள்ள புதிய தடைகள் பற்றியும் அவற்றை உடனடியாக நீக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் ஜெர்மன் மக்கள் சம்பந்தமாக சோவியத் யூனியனுக்கும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய அரசுகளுக்குமிடையில் 1945-ம் ஆண்டில் பொஸ்டனில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் பற்றியும் திரு. டீன் ரஸ்க் சோவியத் உதவி அமைச்சருடன் பேசியதாகத் தெரிகிறது.

## இருதயநோய் நிபுணர் மகாநாடு

ஜெனிவா, ஜூன் 15

இருதயமாற்ற சத்திர சிகிச்சைகள் சம்பந்தமாக வைத்தியத்துறையில் ஏற்பட்டுள்ள புதிய நிலைமைபற்றி ஆராய்வதற்காக 12 நாடுகளைச் சேர்ந்த 24 இருதய நோய் நிபுணர்கள் ஜெனிவாவில் சந்திக்கவிருக்கின்றனர். திங்கட்கிழமை இவர்களின் மகாநாடு நடைபெறும்.

# பிரான்சில் பூரணஅமைதி; பொருளாதார நிலை மோசம்

## பழைய பிரதமரின் புதிய இயக்கம்

பாரிஸ், ஜூன். 15

மாணவர்களின் ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள், தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றினால் பிரான்சின் பொருளாதார நிலை வெகுவாக மோசமடைந்துள்ளதென்றும் இதனால் அணுசக்தி அபிவிருத்தித்திட்டத்தை பிரான்ஸ் தளர்த்தவேண்டி யேற்பட்டுள்ளதுடன் ஐரோப்பிய பொதுச்சந்தைக்கு பிரான்ஸ் தனது பங்கை சரிவரச் செலுத்த முடியாதிருப்பதாகவும் பிரான்சுப் பிரதமரும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சரும் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியிடமிருந்து பேலும் பதினான்கு கோடி டாலர் கடன்பெறுவதற்கு பிரான்ஸ் முயற்சி செய்துவருகிறது.

ஒருமாத காலத்திற்குபின் பிரான்சில் நேற்றுத்தான் பூரண அமைதி நிலவியது. பலஇடங்களிலும் குவிந்திருந்த குப்பை கூழங்களை அகற்றுவதில் சுகாதார அதிகாரிகளுடன் மாணவர்களும் ஒத்துழைத்தனர்.

### புதிய இயக்கம் தொடங்குவார்

அல்ஜீரியாவுக்கு விடுதலை வழங்கியது சம்பந்தமாக ஜெனரல் டிகோலை எதிர்த்து நின்று வெளிநாட்டில் தஞ்சமடைந்து சமீபத்தில் தான் நாடு திரும்பிய முன்னாள் பிரஞ்சுப் பிரதமர் திரு பிடோல்ட் தேர்தலில் இம்முறை போட்டியிடவில்லை. ஆனால் டிகோல் கொள்கைகளுக்கு எதிராகவும் புதிய ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கவிருப்பதாக திரு பிடோல்ட் தெரிவித்திருக்கிறார்.

### வெளியேற்றம்

சோபோர்ன் பல்கலைக்கழகத்திலும் ஓடியன் கலாசாரக் கழகத்திலும் தங்கியிருந்த வேலைநிறுத்த காரர்களை நேற்று பொலிசார் அவ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தினர்.

## இஸ்ரேல்-அரபு மீண்டும்மோதல்

கெய்ரோ. ஜூன் 15

மூன்று வாரத்துக்குள்மீண்டும இஸ்ரேலிய துருப்புகளுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுத் துருப்புகளுக்குமிடையில் சூயஸ் பகுதியில் நேற்று துப்பாக்கிப்பிரயோகம்நடந்தது. இருதரப்பினரும் ஒருவர்மீது ஒருவர் குற்றம்சாட்டினர்.

## மீண்டும் குண்டுவீச்சு

லெகாஸ். ஜூன் 15

நைஜீரியசமஷ்டிக்குடியரசிலிருந்து பிரிந்து பயாவ்ரா எனப் பெயசூட்டியுள்ள கிழக்கு நைஜீரியப்பகுதிமீது நைஜீரிய சமஷ்டிப் போர் விமானங்கள் நேற்று மீண்டும் குண்டுவீசித் தாக்கின. இத்தாக்குதலில் ஒருநகரில் மட்டும் 45பேர் மாண்டனர்.

## அரசாங்க உடைமை

அல்ஜியர்ஸ், ஜூன்15

அல்ஜீரியாவிலுள்ள மேலும 18 அந்நிய வர்த்தக ஸ்தாபனங்களை அல்ஜீரிய அரசாங்கம் அரசாங்க உடைமையாக்கியது.

## பிரித்தானியாவில் விசாக பூசை

லண்டன், ஜூன் 15

பிரித்தானிய இந்துமாமன்றத்தினரின் ஆதரவில் வைகாசிப் பூசை பிரித்தானிய சைவ அன்பர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திரு. எஸ். மெய்யப்பன் இல்லத்தில் கொண்டாடப்பட்டபோது திருவாளர்கள், சிவகுருநாதபிள்ளை. ச. சதானந்தன் ஆகியோர் கூட்டுப்பிரார்த்தனையையும், திருமதி சந்திரசேகரம், திரு. ஜெயரட்னம் ஆகியோர் பக்திப் பாடல்களையும் பாடினார்கள்.

திரு. சபாபதிப்பிள்ளை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திரு. எஸ். கே. எஸ். முதலியார், திரு. வி. பி. நாகராஜன் ராவ் ஆகியோர் 'இந்து தர்மத்'தைப்பற்றிப் பேசினர். காரியதரிசி வி. வேதநாராயணன் நன்றிதெரிவித்துப் பேசினார்.

## நாகபுரிகலகம் 29 பேர் பலி

நாகபுரி, ஜூன் 15

நாகபுரியில் இரு சமூகத்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கலகத்தின் விளைவாக மாண்டவர் தொகை 29 ஆக அதிகரித்துள்ளது. நேற்று முன் தினம் ஒரு கத்திக்குத்துச் சம்பவம் மட்டும் நிகழ்ந்தது. சில இடங்களில்சிறிது நேர ஊரடங்கு உத்தரவு அமுலிலிருக்கிறது. பொதுவாக நிலைமை கட்டுக்குள் அடங்கியிருக்கிறது.

## விமான சேவையில் மாற்றம்

அளவெட்டி, சனி

பலாலி— திருச்சி விமான சேவையில் வெள்ளிக்கிழமையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளது.

பலாலி—திருச்சி விமான சேவை வெள்ளிக்கிழமைகளில் மாலையிலும், மறு நாட்களில் காலையும் நடைபெற்றுவந்தது. ஆனால் தற்போது வெள்ளிக்கிழமைச் சேவையும் காலையில் நடைபெறுமென விமானநிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## சம்பளஉயர்வு இல்லை

புலோலிக்கட்டுவன், சனி

வடமராட்சிப் பகுதியிலுள்ள உயர்தரக் கல்லூரி யொன்றில் கடமையாற்றும் சிங்கள ஊழியர் ஒருவருக்கு சிங்கள மொழியில் பாண்டித்தியம் பெறுக காரணத்தால் உரிய சம்பள உயர்வு வழங்கப் படவில்லையாம். குறித்த ஊழியர் மேலதிகாரிகளுக்கு இது பற்றி முறையிடவிருப்பதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சத்தியம் என்கின்ற வலுவான அத்திபாரத்தின் மேல் தான் உலகம் நிற்கின்றது. அசத்தியம் என்பது இல்லாதது. ஆகையால் அதன் வெற்றிக்கு இடமே இல்லை. சத்தியம் நிலை நிற்பது. ஆகையால் அதை அழிக்கவே முடியாது.

—சாந்தி மகான்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone 389.

சாதுர்மாஸ்ய கீலகவருஷம் ஆனி மாதம் 3-ந்திகதி
(16-6-68)

## உணவு உற்பத்தி முதல் வெற்றி

அரிசி இறக்குமதியில் இவ்வருடம் 50,000 தொன் குறைக்கப்பட்டிருக்கிறது வருடாவருடம் 8 லட்சம் தொன் அரிசி வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது இறக்குமதிசெய்யப்படும் அரிசி போதாமையால் வேறு எந்த நாட்டிடமிருந்து அரிசி இறக்குமதி செய்யலாமென்று ஆராயப்படுவது வழக்கம். ஆனால் இந்த வருடம் இறக்குமதி 'செய்யப்படவிருந்த அரிசியில் 50,000 தொன் இப்போது தேவையில்லை என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது அதாவது உள்நாட்டின் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறதென்பது இதன் அர்த்தம் உணவு உற்பத்தி இயக்கத்தைத் தீவிரப்படுத்தி அதில் முதல் வெற்றியையும் ஈட்டியுள்ள பிரதமரைப் பாராட்ட வேண்டும்.

அரசுத கட்டுப்பாடு ஏற்பட்டதும் வெளிநாடுகள் பலவற்றுக்கும் நமது உணவு அமைச்சர் 'அரிசி யாத்திரை' சென்றார். 'அரிசி கொடுக்கும் நிலையில் நாங்களில்லை' என்று அந்த நாடுகள் பதிலளித்தன. மற்றும் சில நாடுகள் அதிக விலைகேட்டன ஆயினும் நவசீனம் நமக்கு அரிசி தர ஒப்புக்கொண்டது நமது ரப்பரையும் வாங்க முன்னர்போலவே ஒப்புக்கொண்டது. என்றாலும் சீனா கொடுக்கக்கூடிய அரிசி மட்டும் நமது தேவையை நிறைவேற்றக் கூடியதாக இருக்கவில்லை வேறு நாடுகளிலிருந்தும் அரிசி கிடைப்பதாக இல்லை. பெரியதொரு நெருக்கடியைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு நேர்ந்தது. என்றாலும் பிரதமர் துணிச்சலுடன் பங்கீட்டரிசியைப் பாதியாகக் குறைத்து அதை இலவசமாக வழங்க முன்வந்ததுடன் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தையும் ஆரம்பித்தார். உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தைக் கேலிசெய்ததுடன் பங்கீட்டரிசிக் குறைப்பையும் அரசியல் இலாபத்துக்குப் பயன்படுத்தலாமென அரசியல் கட்சிகள் சில கருதின. பங்கீட்டரிசிக் குறைப்பை எதிர்த்துப் பிரசாரம் செய்ததுடன் உணவு உற்பத்தி இயக்கத்துக்கு ஊக்கமளிக்கவும் அவர்கள் முன்வராதிருந்தனர். நெல் உற்பத்தியைப் பெருக்குவதுடன் வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதிலும் அதிக அக்கறை செலுத்தவேண்டுமென்றும் உணவுநெருக்கடியைச் சமாளிக்கவேண்டுமானால் தேசியஐக்கியம் அவசியமென்றும் பிரதமர் வலியுறுத்திவந்தார். உணவு உற்பத்தி அதிகரிப்புக்கு ஊக்கம் தராதவர்கள் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டும் முயற்சிக்குமிடையூறு செய்து வந்தனர்; வருகின்றனர். ஆயினும் நாட்டு மக்கள் உற்சாகத்துடன் உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்தில் ஈடுபட்டதன் பயன்தான் இவ்வருடம் 50,000 தொன் அரிசியை இங்கு இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லாமல் செய்திருக்கிறது. பிரதமரின் துணிச்சலும் அரசாங்கத்தின் முயற்சியும்மட்டும் மிகக் குறுகிய காலத்துக்குள் இந்த அளவுக்கு வெற்றியீட்டித் தர முடியுமானால், அரசாங்கமும், இதர அரசியல் கட்சிகளும், நாட்டு மக்களும் இதர சகல பிரச்னைகளையும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது ஒத்திவைத்துவிட்டு, உணவு உற்பத்தியிலும் மற்றும் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியிலும் ஒன்று சேர்ந்து ஒரு பொதுத் திட்டத்தின்கீழ் தீவிரமாக ஈடுபட்டால் நமது நாடு பொன்கொழிக்கும் நாடாக மாறாதா? தேசிய ஐக்கியம் பற்றிப் பேசுவோர் இதைப் பற்றிச் சிந்திந்தால் என்ன?

## பெரியவளவு முருகனின் பேரருள் தோற்றம்

சமிகானை கிழக்கு பெரியவளவு முருகமூர்த்தியின் மண்டலாபிஷேக உற்சவ விழா இன்று நடைபெறுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

முக்கண்ணன் முதல்வன் மூத்தோன் கணபதிக்கே அப்பன் அருங்கனி கொடுத்தற்கு ஆண்டியாய் வேடங்கொண்டு, அழகுமலை வாசஞ்செய்த அருள்வள்ளல் முருகப்பெருமானைத் திருவேலா, திருக்குமரா, திருமார்பா, திருத்தணிகை மணவாளா, தண்டாயுதபாணி அவ வேலா, தணிகாசலா. சண்முகநாதா, குமா கந்தா கலியுகவரதா, ஆறுமுகவா என்றெல்லாம் அடியார்கள் மட்டும் வேண்டவில்லை. அமரரும் வேண்டினர்.

சலமிலன் சங்கரன் சாய்த்த பொறிகள் வாயுவின் வழி தவறி, அக்கினி ஆற்ருது கங்கையில் மலகி கார்த்திகைப் பெண்களால் பாதுகாக்கப்பெறு. உமையம்மையின் அரவணைப்பில் ஆறு முகங்களாகி குன்றைக் கூறு செய்யும் வேற்படை கொண்டு அருவமும், உருவமுமாகி அனாதியாய்ப் பலவாய், ஒன்ருய் நின்று அரக்கர் குலத்தின் அகந்தையை அழித்து, தேவர் சிறைமீட்டு. சேவற்கொடி கொண்டு நல்வாழ்வு கொடுத்தருளிய முருகப்பெருமானின் சிறப்பியல்புகளை "சண்முகக்கடவுள் போற்றி சரவணத்துதித்தாய் போற்றி, கண்மணி முருகா போற்றி, கார்த்திகைபாலா போற்றி, தண்மலர்க் கடப்பமாலை தாங்கிய தோழா போற்றி, விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி, போற்றி!! என்று காதலால் கேட்டும், கண்ணால் பார்த்தும், வாயினால் புகழ்ந்து பாடி ஆடியும்முடிவு பெருத ஒன்ருகும்.

அடியவர்கள் வேண்டியதை வேண்டியாங்கு கொடுத்தருள ஆறுபடை வீடு கொண்ட அருள்க் குமாரன் "கூபம்பிடர் மறைந்திடு எளிதினில் வளர்ந்து, கழனிவள பெரிய வளவில் கருணையொடு அமைந்துறையும் அறுமுகக் கடவுளே" என வான்புகழ் கொண்டு வர்ணிக்கின்ருர் புலவர் வீரவாகு. அழியா உருக்கொண்ட அசுரனை அழித்த ஆறுமுகப் பெருமானின் தத்துவங்களை ஆன்ரோர் அடிவருடித் தந்துள்ளார்கள். திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தப் புராணம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் போன்ற பாடல்களை அறியாதார் அறியாதாரே.

எனவே ஈழத் திருநாட்டில் இணையற்ற பதிகளாக விளங்கும் கலியுகன் வாழும் கதிர்காமம், நானிலம் போற்றும் நல்லூர், சாசனம் போற்றும் செல்வச் சந்நிதி, மண்டலம் போற்றும் மாவிட்டபுரம், பேரேடு போற்றும் பெரியவளவு, நாலிசை பாடும் நுணசை இப் பதியெல்லாம் வதியும் பரமன் பாலன் அபயங் கொண்டு வாழ அமரர் காத்த கந்தன் நம்முள் உரங்கொண்டு வாழ நல்லுள்ளத்துடன் உறுதி செய்வோம். "அபகார நிந்தை பட்டுழலாதே அறியாத வஞ்சரைக் குறியாதே"

—கலைமணி

கே. தெய்வேந்திரம்

## "ஆஸ்பத்திரி வார்ட் பணியாளரை அவசரகாலத்தாதிகளாக நியமிக்குக"

### சுகாதார அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு "தற்போது ஒழிக்கப்பட்டு வரும் ஆஸ்பத்திரி வார்ட் பணியாளர்களை அவசரகால அத்தியாவசிய சேவை தாதிகளாக நியமிக்க வேண்டும்" எனக் கோரும் மகஜரொன்றைத் தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

தற்போதுள்ள வார்ட் பணியாளர்களின் பதவிக்கு இனி புதிதாக ஆட்களைச் சேர்ப்பதில்லை எனச் சுகாதார அமைச்சு ஏற்கனவே முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க தற்போதைய கடமைத் திட்டத்தில் இப்பணியாளர்களில் 40 விதமானவர்கள் மட்டும் ஆஸ்பத்திரி அட்டண்டுகளாகக் கடமையாற்றுகின்றனர்.

புதிய இத்திட்டத்தின் அட்டண்டுகளுக்கும் பணியாளர்களுக்குமிடையில் நெருக்கடி ஏற்படக் கூடிய அறிகுறிகள் தென்பட்டதைத் தொடர்ந்தே தேசிய அரசாங்க சுகாதார சேவையாளர் சங்கம் இந்த மகஜரைச் சுகாதார அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளது. (கா. நி)

## வீட்டைச்சோதனையிட சென்ற பொலிஸ் கோஷ்டி

### எதிர்ப்பு ஏற்பட்டதால் திரும்பியது

நல்லூர், சனி

வல்வெட்டித்துறையில் ஒரு வீட்டிற்கு சந்தேகத்தின் பேரில் சோதனையிடச்சென்ற பொலிஸ் கோஷ்டியையும், சுங்கப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகளையும் வீட்டுச் சொந்தக்காரர் தடுத்து நிறுத்தினர்களாம்,

வீட்டுச் சொந்தக்காரரான சதாசிவம்பிள்ளை என்பவர், பொலிஸ் கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச்சென்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ராஜேஸ்வரனிடம் வீட்டைச் சோதனையிடுவதற்கு அரசாங்க அதிபரின் உத்தரவுப் பத்திரத்தைக் காட்டும்படி கேட்டதாகவும், அதிலிருந்து பலத்த பிரச்னை எழுந்ததாகவும், இருநூற்றுக்கு அதிகமான பொதுமக்களின் தலையீட்டால், பொலிஸ் கோஷ்டி வீட்டினுள் நுழையாமல் திரும்பியதாகவும் தெரிகிறது.

இதுபற்றி பொலிஸ் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் திடீரென வீட்டைப் பரிசோதனை செய்வதற்கு எந்த அதிகாரிகளினதும் உத்தரவுப் பத்திரம் தேவையில்லை என்றும் சுங்க மருந்துச் சட்டத்தின் கீழ் தாங்கள் பரிசோதனை செய்யலாம் என்றும் கூறினர்.

இச்சம்பவத்தின் பின்னர் பொலிசார் வீடுகளைச் சோதனையிடச் செல்லும் போது அதிக அளவில் தயாராகச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.

## வெள்ள, சூருவளிப்பகுதிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண நிதி


யாழ்ப்பாணம், ஞாயிறு கடந்த வெள்ளப்பெருக்கினாலும் சூருவளியினாலும் பாதிக்கப்பட்டபகுதிகளுக்கு மொத்தம் 12,86,568 ரூபா விசேட நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தகவலை உள்ளூராட்சி அமைச்சு வெளிலட்டுள்ளது.

உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட இப்பணம் வெள்ளப்பெருக்கினாலும், சூருவளியினாலும்சேதமடைந்த வீதிகள், பாலங்கள், மதகுகள், வீடுகள் ஆகியனவற்றைத் திருத்தவே வழங்கப்பட்டது.

மாவட்டரீதியாக வழங்கப்பட்ட [illegible] 2,59,568 ரூபா புத்தளம் சிலாப மாவட்டத்துக்கும், இரண்டாவதுகூடியதொகையான 2,50,645ரூபா யாழ்ப்பாண மாவட்டத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தின் விபரம் வருமாறு:

திருக்கோணமலை மாவட்டம்: 89,055ரூபா, மட்டக்களப்பு மாவட்டம்: 85,855 ரூபா, அம்பாறை மாவட்டம்; 1,32,505 ரூபா. அனுராதபுரம் மாவட்டம்: 1,77,120 ரூபா, பொலநறுவை மாவட்டம்: 95,580 ரூபா, வரணி மவட்டம்: 42,855 ரூபா, மன்னார் மாவட்டம்: 1,53,385ரூபா. (கா. நி)




'ஆறுமுக நாவலர் அவர்களைப் போற்[…] கம் அன்னாரின் நினைவாக யாழ்ப்பாணத்[…] மக்களின் ஒத்துழைப்புடன் முயன்றுவருகிற[…] பெறும் என நம்புகிறோம். அடுத்த நாவல[…] இடங்களில் மணி மண்டபங்கள் அமைக்[…] பாரம்பரியச் சிறப்புகளை […] நாற்றாண்டுத் 'தமிழ் உலகை அணி[…] கொள்ள எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதா[…] ரோம்' என நடைமுறைத் தமிழ் இயக்க[…] தெரிவித்துள்ளது. நினைவுச் சின்னம் எப்[…] படம்தான் மேலே […]

## "உள்ளன்புடன் வழிபடவேண்டும்'

— கவியோகி

சுழிபுரம், சனி

இறைவனுக்கும் தமக்குமிடையேயுள்ள இரும்புத்திரையை விலக்கவேண்டும். அத்திரையை விலக்க உள்ளன்புடன் பூசைகள் செய்து இறைவன் நாமத்தை உச்சரித்து வழிபடவேண்டும்."

இவ்வாறு சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் முருக உபாசனை என்னும் பொருள் பற்றிப் பேசிய கவியோகி சுத்தானந்தபாரதி குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சி திரு. சு. சண்முகரத்தினசர்மா தலைமையில் நடைபெற்றது.

கவியோகிமேலும்தொடர்ந்து பேசுகையில், பக்திமேம்பாட்டுக்கு உரிய சூழலாகவும், பல வகையிலும் புனிதமான நற்கருத்துக்கள் பேசப்படும் இடமாகவும் ஆலயங்கள் அமையவேண்டும். செல்வந்தர்கள் வேதத்தை ஓதும் வேதியர்களுக்கு வாரி வாரி வழங்க வேண்டும். முருகன் நாமத்தை உச்சரிப்பதினாலே தீராத நோய்கள் கஷ்டங்கள் எல்லாம் தீர்ந்துவிடும், நமது கலைகள் பாதுகாக்கப்படாது அழிந்து ஒழிந்து போவதை


## மேலும் […] இருவர் […]

குரும்பசி[…] சண்டிலிப்பாய்[…] தில் நான்கு வீ[…] ரையாக்கப்பட்டு […] நித்திரையிலிருந்[…] த்தி [வயது 75[…] வயோதிபர் மா[…] பத்தமாக மேலு[…] திரை. முத்தை[…] இரு சந்தேக நப[…] காலைப் பொலிசா[…] செய்துள்ளனர்.

இருவரும் மல்லா[…] திரு. எம். சண்[…] முன்னிலையில் ஆஜ[…] யப்பட்டு இம்மா[…] திகதிவரை நி[…] வைக்கப்பட்டுள்ள[…] கைது செய்யப்ப[…] ராசா என்பவரும்[…] ந்து நிமாண்டில் […] சந்தேக நபர்க[…] மீதும் பொலிசார் […] குற்றப் பத்திரி[…] செய்யவில்லை. […] சந்தேக நபர்க[…] சார் தேடி வருகி[…]

யும், மாற்றுச் ச[…] களிடம் காண[…] ஒழுங்கு கட்டுப்ப[…] சமபத்தவர்களிட[…] மல் இருப்பதையு[…] யோது பெரும் […] யாகவுள்ளது எ[…] யட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




...களைப் போற்றும் எண்ணங்கொண்டு எமது இயக் ... யாழ்ப்பாணத்தில் ஒரு சிலை நிறுவ, பல பெரு ... முயன்றுவருகிறது. விரைவில் இம்முயற்சி வெற்றி ... அடுத்து நாவலர் அவர்களின் நினைவாக உரிய ...ங்கள் அமைக்கும் ஆசைகொண்டுள்ளோம். நமது ...க்காகப் பேணிக்காத்த, பத்தொன்பதாம் ...லை அணி செய்த இப்பெருமகனுரை நினைவு ...சிகளுக்கு ஆதரவு கிடைக்கும் என்று நம்புகி ... தமிழ் இயக்கச் செயற்குழு ஓர் அறிக்கையில் ... சின்னம் எப்படி அமைய வேண்டுமென்பதன் ...ான் மேலே உள்ளது.

## மேலும் இருவர் கைது

குரும்பசிட்டி, சனி

...ண்டிலிப்பாய் கிராமத் ... நான்கு வீடுகள் தீக்கி...ாக்கப்பட்டு வீட்டில் ...த்திரையிலிருந்த கே. வயி... (வயது 75) என்ற ...மாதிபர் மாண்டது சம் ...தமாக மேலும் திருவா...ரை. முத்தையா என்ற ... சந்தேக நபர்களை சங்...களைப் பொலிசார் கைது ...ய்துள்ளனர். கைதான ...வரும் மல்லாகம் நீதிபதி ... எம். சண்முகலிங்கம் ...னிலையில் ஆஜர் செய் ...பட்டு இம்மாதம் 25-ம் ...திவரை றிமாண்டில் ...க்கப்பட்டுள்ளனர். முன் ...து செய்யப்பட்ட துரை ...சா என்பவரும் தொடர் ... றிமாண்டில் இருக்கிறார் ...தேக நபர்கள் மூவரி...ம் பொலிசார் இதுவரை ...றப் பத்திரிகை தாக்கல் ...ய்யவில்லை. மேலும் சில ...தேக நபர்களைப் பொலி...ர் தேடி வருகின்றனர்;

..., மாற்றுச் சமயத்தவர் ...டம் காணப்படும் ...ங்கு கட்டுப்பாடு எமது ...பத்தவர்களிடம் இல்லா... இருப்பதையும் காணும் ...ாது பெரும் வேதனை ...கவுள்ளது என்று குறிப் ...ட்டார்.

## மின்சார இலாகா ஊழியர் சங்கம்

அளவெட்டி, சனி

''உங்கள் குறைபாடு எதுவானாலும் சரி நீங்கள் ஒன்றுபட்டு ஆராய்ந்து அதனை அரசாங்கத்திடமும், எம்மிடமும் சமர்ப்பித்தால் நாங்கள் அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி அக் குறைகளை தீர்க் நடவடிக்கை மேற்கொள்ளுவோம்.''

இவ்வாறு அகில இலங்கை அரசினர் மின்சார இலாக்கா தொழிலாளர் சங்கத் தலைவர் திரு.எ.டி.வில்லியம் இச் சங்கத்தின் யாழ். கிளையின் 10 வது மகாநாட்டில் கூறினார்.

காங்கேசன்துறை மின்சார இலாகாவில் திரு. க. தம்பையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின் வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- எ. இ. பெஞ்சமின். உபதலைவர்: எம்.கந்தசாமி. காரியதரிசி-எ. வேலாயுதபிள்ளை, உபகாரியதரிசி-எ.தர்மசேன, தனாதிகாரி-கே.தம்பையா. நிர்வாக சபை அங்கத்தவர்கள்:- எஸ். பொரு, ஜி. வெலிச்சோர், கே. விஜயராமன், கே.சுப்பிரமணியம்.

# பஸ், ரயில் நிலையங்களில் பொது தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

நாட்டின் பலபகுதிகளிலுமுள்ள பிரதான புகையிரத நிலையங்களிலும், மத்திய பஸ் நிலையங்களிலும் பொதுத்தொலைபேசி நிலையங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. இதற்கான முதல் நடவடிக்கையை தபால் தந்தி இலாகா மேற்கொண்டுள்ளது.

பொதுமக்களினதும் பிரயாணிகளினதும் நலனை முன்னிட்டு பிரதான புகையிரத நிலையங்களிலும், மத்திய பஸ்நிலையங்களிலும்பொதுத் தொலைபேசி நிலையங்கள் அமைக்கப்படவேண்டுமென வட இலங்கை பிரயாணிகள் சங்க சம்மேளனம் தபால் தந்தி அமைச்சர் திரு. மொன்டேகு ஜெயவிக்கிரமாவைக் கேட்டுக்கொண்டதைத்தொடர்ந்தேஇந்தநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச் சம்மேளனச்செயலாளர் திரு. வேலுப்பிள்ளைக்கு தபால் தந்தி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி அனுப்பி வைத்துள்ள பதிலில் இதற்கான ஆரம்பவேலைகள்கூடிய கெதியில் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி.]

# கரவெட்டியில் சிரமதான இயக்கம்

### தென்னிலங்கைவாலிபர் கலந்துகொள்வர்

உடுப்பிட்டி, சனி

கரவெட்டியில் சிரமதானம் செய்வதற்காக தென் இலங்கையிலிருந்து சிங்கள வாலிபர்களடங்கிய கோஷ்டியொன்று வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கின்றது. அனுராதபுரத்தைச் சேர்ந்த 150 பௌத்த சிங்கள வாலிபர்களைக் கொண்ட இச்சிரமதானக் குழு கரவெட்டி மேற்கிலுள்ள சிறுபான்மைத்தமிழ் வகுப்பினரின் கனுவில் குளத்தைச் செப்பனிடும் வேலையில் ஈடுபடுமெனத் தெரிகிறது.

கரவெட்டி மேற்கு, கனுவில் பகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைகளை நேரில் பார்வையிடுவதற்காக இங்கு வந்திருந்த போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். பி. ஹுருல்லேயின் அனுராதபுர மாவட்டக் காரியதரிசி இத்தகவலைத் தனக்களிக்கப்பட்ட வரவேற்பில் தெரிவித்தார். அவருடன் அகில இலங்கை ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. ஆர். செல்லையாவும், தமிழ் பௌத்த சங்கப் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

கனுவிலிலுள்ள ஸ்ரீ நாரத தமிழ் சிங்கள பௌத்த பாடசாலையையும் போக்குவரத்து அமைச்சின் மாவட்டக்காரியதரிசி பார்வையிட்டார். இப்பாடசாலையின் பெற்ருர் - ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. இராஜசிங்கம் அவரை வரவேற்று இப்பாடசாலையை ஆரம்பித்து 4 வருடங்களாகிவிட்டதென்றும் ஆசிரியர்கள் சம்பளம் பெருமலே கடமையாற்றுவதாகவும் விரைவில் இக்கஷ்டங்கட்கு பரிகாரம் காண உதவி செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

# ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம் வாபஸ்

அளவெட்டி, சனி

அகில இலங்கை அரசாங்க புகையிரத பாதுகாவலர் சங்கம் தமது வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்டது.

இச்சங்கம் அரசாங்கம் தமது கோரிக்கைகளை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டதால் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறுவதென தமது வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானித்திருந்தனர். அக் கோரிக்கைகள் பின்வருமாறு:

○ உத்தியோகத்தர்விருப்பத்துக்குரிய வரிசை முறைக் கடமையைப் பெற அனுமதித்தல்.

○ ஒரு உத்தியோகத்தர் மற்றொரு உத்தியோகத்தருடன் தமது வரிசைமுறைக் கடமையை மாற்ற அனுமதித்தல்.

○ தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு. ஏ. கரீமை நிபந்தனையின்றி வேலையில் அமர்த்தல்.

மூன்ருவது கோரிக்கையை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு இப்போதுள்ள கடமையாற்றும் வரிசை முறைப்பட்டியல் திருத்தப்பட இருப்பதால் இது நடைமுறைக்குவர சில மாதங்கள் செல்லும் எனத்தெரிகிறது. இத்திருத்தவேலைகளை புகையிரதப்பொதுமுகாமையாளரின் கோரிக்கையின் மீது பாதுகாவலர் சங்கரரிபில் இரண்டு தலைமைப்பாதுகாவலர்கள் செய்துவருகின்றனர். இவர்களுக்குகடமை லீவு வழங்கப்பட்டுள்ளது.

திரு. கரீம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு வாபஸ் பெற்றதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொழிற்சங்க சம்மேளனநிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தினதும், இலங்கை தேசிய அரசாங்க சேவையாளர் தொழிற்சங்க சம்மேளனத்தினதும் வருடாந்தக்கூட்டத்தில் அவற்றின் புது வருட நிர்வாகிகள் தெரியப்பட்டனர்.

தொழிற்சங்க சம்மேளன அரசாங்க பிரிவு ஊழியர், தனியார் பிரிவு ஊழியர்களுக்கென நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்.

அரசாங்க பிரிவு ஊழியர்: தலைவர்: திரு. எஸ். எஸ். வேலுப்பிள்ளை, உபதலைவர் திரு. எஸ்.சிவசம்பு,திரு.வி. சிவசுப்பிரமணியம், பொதுச்செயலாளர்: திரு. எஸ். ஆர். அருமைநாயகம், உபசெயலாளர்கள்: திரு. எஸ் நரேந்திரன்,திரு என். முத்தையா, பொருளாளர்: திரு. எஸ் சந்தியாபிள்ளை. 13 பேர் கொண்ட கமிட்டியொன்றும் தெரியப்பட்டது.

தனியார் துறை ஊழியர்: தலைவர்: திரு. ஜி ஜி.பொன்னம்பலம் எம். பி., உப தலைவர்கள்: திரு. தா. சிவசிதம்பரம் எம். பி.,பொதுச்செயலாளர்கள்: திரு. என். சி. சிவஞானம், திரு. எம்.சிவானந்தன், பொருளாளர்: கு. தனபாலசிங்கம் 11 பேர் கொண்ட நிர்வாகக்கமிட்டியும் தெரியப்பட்டது. (கா. நி.)

## மறுபிறவிபற்றி ஆராய்வார்

கொழும்பு. சனி

மறுபிறவிபற்றி ஆராய்ந்தறிவதற்காக அமெரிக்காவிலுள்ள வேர்ஜினியா பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. அயன்ஸ்டீவன்சன் இலங்கை வந்துள்ளார்.

முந்திய பிறப்புபற்றித் தெரிவிக்கும் இலங்கையிலுள்ள ஓர் ஆறுவயதுச் சிறுமியை அவர் சந்திக்கவிருக்கிறார்.

## கவியோகியின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள கவியோகி சுத்தானந்தபாரதியார் இம்மாதம் 19-ந் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்ப்பாண நாவலர்மண்டபத்தில் ''ஜீவ சிவ ஐக்கியம்'' என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். இந்நிகழ்ச்சிக்கு உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகிப்பார்.

## இங்கு உரையாற்றுவார்

புன்னாலைக்கட்டுவன், சனி

யாழ்ப்பாணப் பகுதிக்கு வரவிருக்கும் இந்திய சுதந்திரக் கட்சிச் சட்டக்கழக உறுப்பினர் திரு. சா. கணேசன் கரவை வாணி கலைக்கழகத்தில் ஐந்து விடயங்கள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார். உடுப்பிட்டி எம்.பி. யும் உபசபாநாயகருமான திரு. மு. சிவசிதம்பரத்தின் தலைமையில் இச் சொற்பொழிவுகள் நிகழும்.

## தற்காலிக வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சங்கானைப் பட்டினசபைக் களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றிய குமாஸ்தா ஒருவர் சங்கானைப்பட்டினசபைத் தலைவரால் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். சபைக்களஞ்சியத்தில் சில பொருட்கள் குறைவாகக் காணப்பட்டதே இதற்குக் காரணம் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

இங்கு கடமையாற்றிய மற்றொரு ஊழியரும் கடந்த வருடம் தற்காலிகவேலை நீக்கம்செய்யப்பட்டார். [கா.நி.]

## கூட்டுறவாளர் தினவிழா

அளவெட்டி, சனி

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் அடுத்தமாதம் முதலாம் திகதி சர்வதேச கூட்டுறவு தினத்தை வெகு விமரிசையாகக்கொண்டாட பல சங்கங்களும் துரிதமுயற்சி எடுத்துவருகின்றன.

அன்று கூட்டுறவு நிறுவனங்களில் கூட்டுறவுக்கொடிகளைப் பறக்கவிட்டு தீபங்களால் அலங்கரிக்கவும் கிராமங்கள் தோறும் பகிரங்கக் கூட்டங்களை நடத்தவும், விவசாயப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, மற்றும் பண்டாரப்பட்ட போட்டிகளை நடத்தவும் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். மேற்குப் பகுதியில் நடைபெறும் விவசாயப் போட்டியில் முதற்பரிசு 100 ரூபாயும், 2-ம் பரிசு 60 ரூபாயும், 3-ம் பரிசு 40 ரூபாயும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில், வலிவடக்குப் பகுதியில் உள்ள 19 சங்கங்கள்கூடி கூட்டுறவு விழாவை நடாத்துகின்றன.

## நாடும் நடப்பும்

'தொலைபேசி விபரக்கொத்து' அழகாகத்தானிருக்கிறது. உங்களில் பலரும் இதுவரை பார்த்திருப்பீர்கள். சோடிக் காளைமாடு பூட்டி கலப்பை பிடித்து விவசாயி உழுதுகொண்டிருக்கிருன். மற்ருேரிடத்தில் 'டிராக்டர்'ரில் ஒருவர் அமர்ந்துகொண்டு நிலத்தை உழுது கொண்டிருக்கிருர். பெண்கள் நாற்று நடுகின்ருர்கள்; முற்றியகதிரைவெட்டி அடுக்கி தலை மீது சுமந்து செல்கிருர்கள். வண்ணத்திப் இக்காட்சிகள் அந்தக் கொத்தின் முகப்பு அட்டையை அலங்கரிக்கின்றன. உள்ளேயும் பக்கத்துக்குப் பக்கம் உணவுஉற்பத்தியை அதிகரிக்கவேண்டிய அவசியத்தையும் அதனுல் ஏற்படக்கூடிய பயன்களையும் வலியுறுத்தும் வாக்கியங்கள் இடம்பெற்றுள்ளன.

தெளிவான அச்சுப்பதிவு. அகரவரிசைப்படி தொலைபேசி பாவனையாளர் பெயர் விலாசம், இலக்கங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

தமிழ்மொழி பெயர்ப்புப் பதங்கள் சில கஷ்டமானதாகத்தான் இருக்கின்றன. என்ருலும் தமிழ் மொழியில் சிறந்த முறையில் இப்படியான விபரக்கொத்து ஒன்றைத் தயாரிக்கமுடியுமென்பதை உணர்த்தியிருப்பதன் மூலம் இதுவரை இதைத் தயாரிக்கத்தயக்கம் காட்டியவர்களை இந்த விபரக் கொத்து எள்ளி நகையாடுகிறது.

தொலைபேசி பாவனையாளரான தமிழர் ஒவ்வொருவரும் இந்த விபரக்கொத்தை வைத்திருப்பது அவர்களுக்குப் பெருமை தரும். தமிழ் வெளியீடுகளை தமிழர்கள் வாங்கி ஆதரிப்பதன்மூலமும் தமிழ்மொழியைத் தமிழர்களே பேணிப் பாதுகாப்பதன்மூலம் தமிழ் மொழிக்கு வளமையளிக்க முடியும். தமிழரே தமிழைப் புறக்கணித்தால் தமிழை யார் பாதுகாப்பது?

ஃ ஃ ஃ

தேசிய ஐக்கியம் பற்றி பலரும் கூறுகின்றனர். தேசிய ஒருமைப் பாட்டுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மார்க்கம் கூறுகின்றனர். ''தேசிய ஐக்கியம், தேசிய ஐக்கியம்'' என்று கூறிக்கொண்டு தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு இடையூறு செய்வதா தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டும் வழி?'' என்று பிரதமர் மக்கள் பிரதிநிதிகள் சபையிலேயே கேட்டிருக்கிருர்.

தேசிய ஐக்கியத்தை உருவாக்கவும் அதை நிலைநாட்டவும் ஒரு சபையை நிறுவினுல் ஓரளவாவது பயன்தர மாட்டாதா? இந்தியாவில் தேசிய ஒருமைப்பாட்டுச் சபை என ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு பணியாற்றிவருகிறது. இங்கும் கல்விமான்களையும், சமய, சமூக, அரசியல் தலைவர்களையும் கொண்ட ஒருசபையை நிறுவினுல் சிறிதளவாவது பயன்கிடைக்கலாம் என்பது எனது கருத்து.

பிரதமரே இதற்கு ஊக்கமளித்து சகல சமூகத்திலுமுள்ள சிறந்த கல்விமான்களையும் தலைவர்களையும் கொண்ட ஒரு சபையை நிறுவினுல் அது தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டும் வழியிலும் தேசிய ஐக்கிய, ஒருமைப்பாடுஎன்ருல்என்ன என்பதையாவது மக்கள் மனதில் பரப்ப உதவுமல்லவா?

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவ மணிகளே!

வணக்கம்

உங்கள் ஆர்வத்தை தினம் 'மலரு'க்கு வந்து குவியும் விஷயங்களிலிருந்தும் கடிதங்களிலிருந்தும் காணக்கூடியதாகவுள்ளது உதாரணத்துக்குஒன்று-

மாமாவுடன் மிகிந்தலே, சிகிரியா ஆகிய இடங்களுக்குச் சென்று தான் ரசித்தவற்றை தன் சின்ன உள்ளத்துக்குப்பட்டபடி எழுதி அனுப்பி வைத்திருக்கிறார், வேம்படி மகளிர் கல்லூரியில் பயிலும் ஒன்பது வயதுச் செல்வி நாகநந்தினி சண்முகலிங்கம். [அங். இல: 49] சபாஷ் நந்தினி! இவரைப்போன்ற வயதில் மிக மிக இளையவர்கள் 'மலரை' படித்துப் பயன் பெறுகிறார்களென்பதைப் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகவுள்ளது.

எழுத்தார்வத்தை வளர்க்கும் அதே நேரத்தில் மாணவ மாணவிகள் மத்தியில் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தையும் ஏற்படுத்துவது எமது முக்கிய நோக்கம்!

தரமான நல்ல புத்தகங்களாகத் தேர்ந்தெடுத்துப் படியுங்கள்! படிப்பதை மனதில்கொள்ளுங்கள்! நிச்சயமாக அவைகளினால் பயன்பெறுவீர்கள்!

கடந்த மலரில் குறிப்பிட்டபடி இவ்வாரம் போட்டி இடம்பெறவில்லை; அடுத்தவாரம் உங்களை ஏமாற்றமாட்டோம்!

போயா தினத்துக்குமுதல்நாள் சந்திப்போமே!

—மாமா

## 'மாணவர்மலர்' அங்கத்தவர் பத்திரம்

பெயர்: ____________________

வயது: ____________________

பாடசாலை: ____________________

முகவரி: ____________________

____________________

வகுப்புஆசிரியர் கையொப்பம்

## அன்னை!

மாதுங்கள் யாதும் சாற்று—நல்ல
மகனெனப் பெற்றிட்ட அன்னை!
கீத இசை தந்தெனக்கு[ப்]—புதுக்
கீர்த்தி யளித்திடும் அன்னை!

அன்னையே என்னுயிர்க் கோயில்—அவள்
அன்பே எனதின்ப வாயில்!
'அன்னையே முன்னறி தெய்வம்'—அவள்
அடியை வணங்கி நாம் உய்வம்!

—கி. குலசேகரம்
[அங். இல: 50]

## உறுதிகொள்வாய்!

உத்தமராய் வாழ்ந்திடவே உறுதிகொண்டு
உழைத்திடுவாய் உண்மை வழிதனில்சென்று
சித்தமே கலங்காமல் சிறுலகி லின்பம்
சிறந் தோங்க செய்தவர்கள் வழிநடப்பாய்

*

தமிழையுன் உயிராக எண்ண வேண்டும்
தமிழிற்கு துன்பமெனில் தலைநிமிர வேண்டும்
தமிழையுன் வழியாக அமைய வேண்டும்
தரணியில் தமிழ்வாழ வகைசெய்ய வேண்டும்.

—வி. இன்னாசிமுத்து

## பொறுக்கிய முத்து



உலகமனைத்தும் ஒரு பெரிய சித்திரம். ஆசைகள் இல்லாதிருந்தாலே அதைக் கண்டு இன்புறலாம். எனது, எனது என்ற முட்டாள் தனம் ஒழியவேண்டும். ஆசைகளை விட்டால்தான் கடவுளின் இந்த உலகத்தை நன்கு சுவைக்க முடியும்.

— சுவாமி விவேகானந்தர்

## தெரிந்து கொள்ளுங்கள்!

○ ஜப்பானியத் தலைநகர் யாது?
டோக்கியோ.
○ எய்பெல் கோபுரம் எங்குளது? உயரம்?
பாரிசில். 985 அடி.
○ சிசிலியில் உள்ள பேர் போன எரிமலை யாது?
விசூவியஸ்.
○ தொலை பேசியைக் கண்டுபிடித்தவர் யார்?
கிரஹாம்பெல்.

அனுப்பியவர்:
இரகுநாதன்
(அங். இல: 26)

## அறிவை அளவிடுங்கள்

இந்தியாவில் இருந்த வீரமன்னரான புருடோத்தமர் எதிர்த்த உலகப் புகழ் பெற்ற வீரர் யார்?

மகா. அலெக்சாந்தர்

கிரீஸ் நாட்டில் வண்ணப் படங்கள் வரைவதில் தலைசிறந்து விளங்கியவர் யார்?

— அபெல்லஸ்

ஆபிரகாம் லிங்கனின் கடனை அடைத்த பேரர் வீரன் யார்?

வில்லியம் ஸ்காட்

உலக விஞ்ஞானிகளில் மிக அதிகமான புதிய கருவிகளைக் கண்டு பிடித்தவர் யார்?

தாமஸ் அல்வா எடிசன்

அனுப்பியவர்:
ஐயாத்துரை கமலரஞ்சினி

## மாணவர் மலர் அங்கத்தினர்

[26] க இரகுநாதன் ஹாட்லிக்கல்லூரி. [27] கை. லோகாம்பிகை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி. [28] க. ஜெயரத்தினம் யாழ். மத்திய கல்லூரி. [29] சி. சுகுமாரன் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி. [30] ம. சண்முகவடிவேல் யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி [31] இ. அருளேசன் நாவற்குழி மகாவித்தியாலயம். [32] சுந்தரலிங்கம் கமலோசனி, பருத்தித்துறை மகளிர் மகாவித்தியாலயம். [33] ... சிலாவதி வண்ணைவைத்தீஸ்வரா கல்லூரி. [34] ப. சண்முகநாதன் நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம். [35] செ. சண்முகநாதன் ... வேல் ... இந்துக்கல்லூரி.

—(தொடரும்)

விஞ்ஞானப் புதுமை

## மின்சாரத் தூக்கம்!

இயற்கைத் தூக்கத்திற்குப் பதில், செயற்கை முறையில் மனிதர்களைத் தூங்க வைத்து விடுகின்றனர் சோவியத் விஞ்ஞானிகள் என்று சில காலத்திற்கு முன்னர், அயல் நாட்டுப் பத்திரிகைகளில் பரபரப்பான செய்திகள் வெளியிடப்பட்டன. ஆயிரக் கணக்கான மக்கள் அவ்வகையில் பரிசோதிக்கப் பட்டனர் என்று அச் செய்திகள் குறிப்பிட்டன.

சோவியத் விஞ்ஞானிகள் ஒருவகைப் புதிய கருவியை உண்டாக்கினர். அக்கருவியில் ஒரு குழிந்த பிளாஸ்டிக் 'கப்' பொருத்தப்பட்டுள்ளது. அது நோயாளியின் கண்களின் மீது வைக்கப்படும். இக்கருவி இயக்கப்பட்டவுடன், சில நிமிஷ நேரத்தில் நோயாளி தூங்கி விடுகிறான். ஒழுங்காக, முறையாக மூளையிலுள்ள அறைகளில் ஒருவகைத் தூண்டுதல் ஏற்பட்டால், அது பரவும் உள்ளடக்கலைத் தோற்றுவித்து அதன் காரணமாக தூக்கம் விளைகிறது. மின்சார முறையில் அவ்வித உள்ளடக்கல் தோற்றுவிக்கப்படுகிறது. இதனை 'மின்சாரத் தாலாட்டு' என்கிறோம். புகழ் பெற்ற ரஷ்ய உயிரியலாளர்கள் இவான் பாவ்லோவ், என். வெதென்ஸ்கி ஆகியோரது கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இம்முறை வகுக்கப்பட்டது. மூளையிலுள்ள நோயுற்ற பாகத்தில் உள்ளடக்கலைத் தோற்றுவித்து, பழுதுபட்ட நரம்பு செல்கள் சகஜ நிலையை அடைய இந்த சிகிச்சை உதவுகிறது.

ஒவ்வொரு முறையும், மின் தூக்கம் 30—40 நிமிஷங்களிலிருந்து 1 1/2 மணி அல்லது 2 மணி நேரம் நீடிக்கக் கூடும். மின் ஓட்டத்தை நிறுத்திய பின்னரும், நோயாளிகள் சாதாரணமாக கொஞ்ச நேரம் வரை தூங்கிக் கொண்டே இருக்கின்றனர்!

ஒருபடி உயர்வோமா—3

## நேரம்

—கணேஷ்

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்லபாட்டு.
மாலை முழுதும் விளையாட்டு — என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

—பாரதியார்.

காலத்தின் அவசியத்தை உணர்ந்து நாம் காரியம் செய்ய வேண்டும். நாம் தவறவிடும் ஒரு செக்கண்டையாகுதல் நம்மால் மீட்டுக்கொள்ளமுடியாது.

குறிப்பிட்ட நேரத்திற்கு ஒவ்வொரு விஷயத்தையும் செய்யப் பழகிக்கொள்ளுவோமானால் நேரம் வீணாவதை ஓரளவு தடை செய்துவிடலாம்.

அந்தந்த நேரத்திற்கு அந்தந்தக் கருமம் செய்வதால் நாம் ஆற்றவேண்டிய அலுவல்களில் வீண் குழப்பம் ஏற்படுவதையும் தடுத்துக்கொள்ளலாம். குழப்பம் இல்லாவிட்டால் நமது வாழ்வு சீரகி சிறக்க வழியிருக்கும்.

'காலம் பொன்னானது' 'காலம் பெறுமதி வாய்ந்தது' 'காலம் யாருக்கும் காத்திருப்பதில்லை' என்பன போன்ற பொன்மொழிகள் நமக்குக் காலத்தின் அவசியத்தை வற்புறுத்துகின்றன.

ஒரு செக்கண்டைத்தானும் நாம் வீணாக்காது பிரயோசனமான வழியில் செலவிடுவோம். அப்பொழுது நாம் வாழ்வின் உயர்ந்த படிகளுக்குப் படிப்படியாக ஏறக்கூடியதாக இருக்கும்.

நேரம் வீணாகிவிடாதிருக்க இன்ன இன்ன நேரத்திற்கு இந்த இந்த வேலையென நமக்குள்ளேயே ஒரு நேரசூசிகை தயாரித்துக் கொண்டோமானால் நாம் ஒவ்வொரு நாளையும் உபயோகமானதாக்கிக் கொண்டிருப்போம். இதற்காக காலை நாம் எழுந்திருக்கும் நேரத்திலிருந்து இரவு உறங்கும்வரை நாம் ஆற்றவேண்டிய கருமங்கள் பற்றிய ஒரு உத்தேச நேரசூசியை தயாரிப்போம்.

ஒரு நாள் முடியும்பொழுது அந்த நாளில் நேரத்தை நாம் சரியானபடி பிரயோசனமான முறையில் செலவிட்டோமா என்று கணக்கெடுத்துக் கொண்டோமானால் அடுத்தநாள் ஆரம்பத்திற்கு இது மிகவும் உதவியாக இருக்கும்.

நாம் எவ்வளவுக்கெவ்வளவு நேரத்தைப் பிரயோசனப் படுத்திக் கொண்டிருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் நம்மை உயர்த்திக் கொண்டிருக்க முடியும்.

கல்வி கற்க, உணவருந்த, உடை உடுத்துக் கொள்ள, ஓய்வெடுத்துக் கொள்ள தினமும் குறித்த நேரம் ஒதுக்கிக் கொள்ள வேண்டும். இதனால் நமது உடலும் நெடுநாள் சீராக உழைக்க முடியும்.

மணிக்கூடு ஓடிக்கொண்டே இருக்கிறது. நமக்காக அது காலத்தைக் காட்டிக்கொண்டிருக்கிறது. அதை உணர்ந்து நாம் ஒவ்வொரு செக்கண்டையும் சுறுசுறுப்புடன் பிரயோசனப் படுத்துவோம். எல்லா நேரமும் நமக்கு நல்ல நேரமாக இருக்கட்டும் நமது வாழ்வை உயர்த்த உதவக் கூடிய நேரமாக இருக்கட்டும் இமைப்பொழுதையும் வீணாக்காது இயன்றவரை பயன்படுத்துவோம்.

## வள்ளுவர்விழா

உடுவில், சனி

கொக்குவில் இளைஞர் சங்க முன்றலில் மஞ்சள் மணி சனசமூக நிலைய ஆதரவில் திருவள்ளுவர் விழா கொண்டாடப்பட்டது.

திரு. க. நடராசா தலைமையில் நடந்த இவ் விழாவில் சைவப்புலவர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை சிறப்புச்சொற்பொழிவாற்றினார்.

திரு சி. குகதாசன், ஆ. க. பற்குணராசா ஆகியோரும் பேசினர்.

செல்வி விசாலாட்சி மூர்த்தியின் இன்னிசை நிகழ்ச்சியும் சபா சதாசிவத்தின் வில்லுப்பாட்டும் நடைபெற்றன. ——

## ஓய்வுபெறும் லிகிதர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. மகேசன் 35 வருட சேவையின் பின்னர் தமது சேவையிலிருந்து ஓய்வு பெற்றதை முன்னிட்டு செயலகஊழியர்களால் பிரியாவிடை ஒன்று அளிக்கப்பட்டது. [சா.நி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சைவத்தைக் காப்பாற்றிய பெரியார்கள் இவர்கள்"

சுழிபுரம், சனி

"பிறசமயங்களால் சைவ சமயத்துக்குக் காலத்துக்குக்காலம் தொல்லைகள் நேர்ந்தவேளையில் அவ்வப்போது அருட்குரவர்கள் தோன்றிச் சைவத்தைக் காப்பாற்றினார்கள். ஞானசம்பந்தரும், அப்பரும் 7-ம் நூற்றாண்டிலே அவதரித்துச் சமணசமயத்தினரால் உண்டான இடையூறுகளைப் போக்கினர். மாணிக்கவாசகர் 9-ம் நூற்றாண்டிலே அவதரித்து கொடுமைகளிலிருந்து சைவத்தைக் காத்தார் 19-ம் நூற்றாண்டிலே நாவலர் பெருமான் அவதரித்து சைவத்தைக் காத்தார் இவ்வாறு சைவத்தைக்காத்த பெரியோர்களைச் சமய குரவர் என அழைக்கின்றோம். இவர்களனைவரும் தமிழ்மொழியையும் வளர்த்தனர். இதனாலே சைவமும் தமிழும் நெருங்கியதொடர்புடையனவாய்ப் பின்னிப் பிணைந்துள்ளன."

இவ்வாறு பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழாவில் தலைமை வகித்துப் பேசிய பண்டிதர் க. ஆறுமுகம் குறிப்பிட்டார். மாணவர்களின் கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது. ஆசிரியர் இ. ஆறுமுகம் பெரிய புராணம் பாட, ஆசிரியர் க. ஆறுமுகம் உரை கூறினார்.

## ஆலோசனைக் கூட்டம்

உடுவில், சனி

உடுவில் வட்டார தலைமை ஆசிரியர் சங்க ஆலோசனைக் கூட்டமொன்று நாளை மாலை இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. உடுவில் பகுதி வட்டாரக் கல்வி ஆலோசகர் திரு எஸ். இராசா தலைமை வகிப்பார்.

## காலக்கெடு 22ம் திகதிவரை

காங்கேசன்துறை சனி

சென்றமாதம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த நான்கு சங்கங்களும் ஒன்று சேர்ந்து 14 அம்சக்கோரிக்கையை கைத்தொழில் அமைச்சருக்கும் சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவருக்கும் அனுப்பியிருந்தது. 21 நாள் அவகாசம் கொடுத்து இச்சங்கங்கள் கோரிக்கையை விடுத்தது இதற்குப் பிற்தினால் வேலை நிறுத்தத்தில் குதிப்பதாக எச்சரித்திருந்தனர்.

கூட்டுத்தாபனத் தலைவர் 20 ம் திகதி நான்கு சங்கத் தலைவர்களையும் அழைத்து ளதால் இக்காலக்கெடு 22ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களின் நீண்ட 'கியூ'

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுமார் 8 மணி நேரம் நீண்டிருந்த 'கியூ'வில் கால் கடுக்க நின்றார்கள் மாணவர்கள். இச்சம்பவம் நேற்று முன்தினம்யாழ்ப்பாணம்அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

அடுத்த டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜீ. ஸி. ஈ. சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பப்பத்திரத்துக்குத்தேவையான முத்திரைகளை வாங்கவே மாணவர்கள் இந்த 'கியூ'வில் நின்றார்கள். தபால் நிலையங்களில் 5, 10 ரூபா முத்திரைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தபோதும் யாழ்ப்பாணம் செயலகத்தில் இந்த முத்திரைகள் போதுமான அளவு பெறக்கூடியதாகவிருந்ததேஇதற்குக் காரணம்.

இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பரீட்சை இலாகாவுக்கு அனுப்பும் கடைசித் திகதி நேற்றுமுன்தினத்துடன்முடிவடைந்ததுகுறிப்பிடத்தக்கதாகும். [ஈ.நி.]

## விடுமுறைக்கழக அங்குரார்ப்பணம்

உடுவில், சனி

ஏழாலைப் பிரிவுப்பாடசாலை ஆசிரியர்களுக்கான விடுமுறைக் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசிய உடுவில் வட்டாரவித்தியாதரிசி திரு எஸ். இராசாமாணவர்களின் வரலாற்றுக் குறிப்பின் முக்கியம் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். ஏழாலை மகாவித்தியாலய அதிபர் திரு எஸ். அம்பலவாணர் கூட்டத்திற்கு தலைமைவகித்தார்.

மானிப்பாய் பகுதி பாடசாலைகளின் விடுமுறைக் கழக கூட்டம் இம்மாதம் 25ந்திகதியும் உடுவில் சுன்னாகப் பிரிவுகளின் கழக கூட்டம் ஜுலை 1ம் திகதியும் நடைபெற இருக்கின்றன என அறியப்படுகிறது.

## "புகழ் ஓங்கும் மங்கமாட்டாது" கென்னடி மறைவுக்கு அனுதாபம்


சுழிபுரம், சனி

"உலக சரித்திரத்தில் கென்னடி குடும்பம் ஓர் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. அண்ணன் காட்டிய பாதையில் செல்லவிருந்த தம்பிக்கு கிடைத்த பரிசு துப்பாக்கிச் சூடாகும்.

பிறப்பதும், இறப்பதும் சகஜம். இலட்சியவாதிகளை அவர்கள் வழிச்சென்று வெல்ல வேண்டும். அதைவிடுத்து குறுக்கு வழியில் கோழைகள் செய்யும் இலே சசத்தனத்தால் அவர்கள் புகழ் மேலும் வளரும் அல்லாது மங்க மாட்டாது."

இவ்வாறு தொல்புரம் கென்னடி கழகத் தலைவர் திரு. சண். கந்தையா அவர்கள் காலம் சென்ற செனேட்டர் றொபேட் கென்னடியின் மறைவுக்கு அனுதாபம்தெரிவித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். இக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.


நிறைந்த சுவை
குறைந்த விலை
சிறந்த பில்டர்




போர் ஏசஸ் மட்டுமே சிறந்த பெறுமதியும் திருப்தியான புகைபிடி இன்பமும் தருகிறது. ஏனெனில்...

நன்கு கலவை செய்த பக்குவம் முதிர்ந்த உன்னதமான வேர்ஜினியா புகையிலை கொண்டு அது தயாராகிறது.

இவ்வளவு சுவை செறிந்த புகையிலைக் கலவை அதி நவீன பில்டர் முனையுடன் சிறப்பாக இணைத்திருக்கிறது.

சிகரெட்டுகள் 10-ம், 20-ம் கொண்ட பெட்டிகளிற் கிடைக்கும்

போர் ஏசஸ்

பில்டர் முனைச் சிகரெட்டுகள்

இலங்கையில் தயாரிப்போர்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட

P 7322


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணா அறியாமல் அறிக்கை விட்டதற்கு வருந்தம்

## மதியழகன் — கருணாநிதி தகராறு இல்லை

சென்னை, ஜூன் 14

தமிழகத்தின் நான்கு முக்கிய மந்திரிகள் தம் பதவிகளைத் துறந்து கட்சியின் வளர்ச்சியில் கவனம் செலுத்தவேண்டும் என்று பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. எம். கருணாநிதி அறிவித்திருந்தாரல்லவா? அதற்கு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தெரிவித்திருந்த எதிர்ப்பை இப்பொழுது வாபஸ்பெற்றுள்ளார்.

திரு. கருணாநிதியின் யோசனைக்கு எதிராக நான் தெரிவித்த கருத்துகளுக்கு வேறு நோக்கம் கிடையாது. திரு. கருணாநிதியின் மனதில் பதியவைப்பதற்காகவே எனது வாதங்களைத் தெரிவித்தேன். இதனால் திரு. கருணாநிதியிடம் நான் மதிப்பு வைக்கவில்லையென்பது அர்த்தமல்ல. எங்கள் இருவருக்குமிடையில் மிகவும் நேச மனப்பான்மை இருந்துவருகிறது என்று திரு. மதியழகன் தெரிவித்துள்ளார்.

கட்சியை எவ்வாறு பலப்படுத்தவேண்டும் என்பது பற்றி எனக்கும் திரு. கருணாநிதிக்கும் மாறுபட்ட கருத்து இருந்துவரலாம். ஆனால் இந்த விஷயம் பற்றி இறுதியான முடிவை எங்களுடைய சகோதரர் 'அண்ணா' தான் செய்யவேண்டும். அண்ணாவின் கருத்துகளை அறிந்துகொள்வதற்கு முன்பு அறிக்கை வெளியிட்டதற்காக வருந்துகிறேன் என்று திரு. மதியழகன் பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## நாகர்கள் சதி

புதுடில்லி, ஜூன் 14

கடந்த வாரம் தலைமறைவு நாகர்களுக்கும் இந்திய பாதுகாப்புப் படையினருக்குமிடையில் நடைபெற்ற கைகலப்பில் மரணமான நாகர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தஸ்தாவேஜுகளிலிருந்து நாகாலந்து ராஜ்ய அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக தீவிரமான சதித்திட்டமொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

சீனாவின் உதவியுடன் இந்த சதித்திட்டம் நிறைவேற்றப் படவிருந்ததாம். இந்த நாகர்களில் பலர் மலைப்பிரதேசங்களில் போரிடும்முறைகளில் சீனாவில் பயிற்சிபெற்றிருந்தார்கள். இவர்களிடமிருந்து சீன ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.


ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ நடித்த
நான் யார் தெரியுமா?



றிங்ஸ்லி பிளாசா மைலன்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] ராஜ் [நீர்கொழும்பு]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] விஜிதா [வட்டன்] அயன் [மன்னார்]
★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த





ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு


## சுவீப்

நேற்று வெளியான தேசிய சுவீப் முடிவுகளில் பின்வரும் திருத்தங்களை கவனிக்குக.

| தவறு | சரியானவை |
|---|---|
| 22 N 0153 | 22 N 0463 |
| 39 L 0233 | 39 L 0235 |
| 38 X 0576 | 39 X 0573 |
| 07 L 0276 | 07 L 0275 |

## காஷ்மீரில் ஷேர்லிகொரியா

புதுடில்லி, ஜூன் 14

காஷ்மீர் பள்ளத்தாக்கில் 5 நாட்களைக் கழிப்பார் இலங்கை பார்லிமெண்ட் சபாநாயகர் திரு ஷேர்லி கொரியா. இந்திய லோக் சபையின் விருந்தினராக இங்கு வந்துள்ள சபாநாயகர் திரு. கொரியா இன்று ஸ்ரீநகர் பயணமானார்.

## பார்லிமெண்ட் கூட்டத்தொடர்

கொழும்பு வெள்ளி

இம்மாதம் 18ந் திகதி பார்லிமெண்ட் கூடும்போது பார்லிமெண்ட் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படும். முக்கிய மசோதாக்களும் பிரேரணைகளும் அன்று நிறைவேற்றப்படலாம். இதற்காக அன்று பார்லிமெண்ட் நள்ளிரவு வரை நடைபெறலாம்.

## 500 மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, வெள்ளி

வித்தியோதய பல்கலைக்கழக மாணவர்கள் 500 பேர் இன்று வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர். புல்லர்ஸ் வீதியில் இன்று பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர். உயர்கல்வி தேசியசபையின் தலைவரை மாணவர்கள் பேட்டிகாண்பதற்கு முயற்சி செய்தனர். அமைதி கெடாமலிருக்க பொலிஸார் பார்த்துக்கொண்டனர்.

வித்தியோதய பல்கலைக்கழகத்திலுள்ள விஞ்ஞானப் பிரிவை வித்தியாலங்கார பல்கலைக்கழகத்துக்குமாற்றுவதை எதிர்த்து வித்தியோதய மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.


3வது வாரம்!
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர்.விஜயா
நடிக்கும்
முகூர்த்த நாள்



2வது வாரம்!
வின்சர்
ஜெமினி - சாவித்திரி
K.R.விஜயா - முத்துராமன்
நடித்த
சீதா



MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00, 9-45P.M
Elvis Presley
Ursula Undress
in
Fun In Acapulca
[Color]



REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P M.
Rod Steiger & Nadja Tiller
in
ON FRIDAY
AT ELEVEN
[Adults]


## "தீட்சைபெறுதவன் சைவனல்லன்"

### அனலைதீவில் தத்புருஷதேசிகர்

அனலைதீவு, வெள்ளி

"தீட்சை பெறுதவன் சைவசமயத்தவனாக இருக்க முடியாது. ஒவ்வொருவரும் தீட்சை பெறவேண்டியது அவசியம்"

இவ்வாறு அனலைதீவு பெரியபுலம் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற விழாவில் ஸ்ரீலஸ்ரீ தத்புருஷ தேசிகர் 'நமது கடமை' என்னும் பொருள் பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அனலைதீவு சைவ பரிபாலனசபை ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவில் தத்புருஷதேசிகர் தொடர்ந்து பேசுகையில், இறைவருள் நமக்கு பேசக்கூடிய வாயைத்தந்து ஏனைய உயிருள்ள பிராணிகளுக்கு சாப்பிடமட்டுமே வாயைக் கொடுத்துள்ளார். காலையிலிருந்து மாலைவரை கோழிகள் உணவை நாடிநிற்கின்றன; பசுவோ மேய்ந்த இரையை மீட்கும் வேலையில் ஈடுபடுகிறது. அதுபோல நாம் எமக்குக் கொடுத்தவாயால் நல்லவை பேசுவதிலும், நமக்கு வாய் தந்தவனைப் பற்றிப்புகழ்வதிலும் காலத்தைக் கழிக்கவேண்டும் என்றார்.

"பெற்றோர் எவ்வழியோ குழந்தைகளும் அவ்வழி நிற்கும். ஆதலால் பெற்றோர் சிவதீட்சை, பூசை செய்வதினால் பிள்ளைகளும் அவ்வழி நிற்க ஏதுவாகும்" என்று கூறினார் தத்புருஷ தேசிகர்.

150க்கும் அதிகமான மாணவ மாணவிகள் சிவ தீட்சைபெற்றனர்.

## தீர்ப்பு ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, சனி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கிருஷ்ணசாமியின் மகள் பரமேஸ்வரி என்ற சிறுமி அணிந்திருந்த ரூபா 90 பெறுமதியான காப்பு ஒன்றை செல்வச்சந்நிதி கோவிலடியில் வைத்து இம்மாதம் 2-ந் திகதி களவாடியதாக பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். சிவசுப்பிரமணியம் என்பவர் மீது பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்கினராசா முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியை குற்றவாளியாகக்கண்டு தீர்ப்பு வழங்குவதை வேறொரு திகதிக்கு ஒத்திவைத்தார்.

## நிரந்தர அந்தஸ்து பெறவழி

சுழிபுரம், சனி

"அறிவு, அனுபவம், பயிற்றல் முறை என்ற உரத்தையிட்டுச் சுதந்திர சூழ்நிலையில் கல்வியை மலரவைப்பவன் நல்லாசிரியன். ஆசிரியர்களின் ஆலோசனை அனுசரணை இல்லாத் திட்டங்கள் கல்வித் துறையில் பயன் கொடாது.

ஆசிரியர் சுதந்திர சூழ்நிலையில் வாழ்ந்தாலொழிய சமுதாயத்தில் நிரந்தர அந்தஸ்தைப் பெறமுடியாது"

இவ்வாறு மேற்கு யாழ்ப்பாண ஆசிரிய சங்க வருடாந்த விழாவில் சங்கத் தலைவர் திரு. க. வயிரமுத்து பேசுகையில் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் "மாணவர் தொகை நாட்டில் பெருக்கல் விருத்தியில் பெருகிக் கொண்டு போகும் போது ஆசிரியர் தொகை வர்க்க மூலத்தில் குறைந்து கொண்டு போகிறது. மாணவர் தொகைக்கேற்ப ஆசிரிய நியமனங்களில்லை. கல்வித் திட்டங்கள் உருவாக்கவும் கல்வியை நிர்வகிக்கவும் ஆசிரிய சமுதாயத்திலிருந்து பிரதிநிதிகள் நிர்வாகக் குழுவில் நிரந்தரமாக இடம்பெற வேண்டும்." என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திரு. ஏ. எஸ். கனகரத்தினமும் பேசினார். பின்வருவோர் புது வருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்,

தலைவர்: திரு. ச. சபாநடேசன், உபதலைவர்; திரு எஸ். திருச்சிற்றம்பலம், செயலாளர்: திரு. வே. நாகராசா, பொருளாளர்; திரு. எஸ். திருநீலகண்டசிவம், நிர்வாகசபை அங்கத்தினர் திருவாளர்கள் கே. வைரமுத்து, எஸ். மகேசன், எஸ். பரமகுரு. கே, இராசையா, என். சிவஞானம்.

## கிளிநொச்சியில் கூட்டுறவு விழா

கிளிநொச்சி, சனி

தென் யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சமாஜத்தினரால் வருகிற மாதம் கூட்டுறவு விழா கொண்டாடப்படவிருக்கிறது. கிளிநொச்சி பருட்டிக்கோ மைதானத்தில் நடைபெறும். இவ் விழாவில் உபஉணவு உற்பத்தி இயக்கமும் முக்கிய இடம்பெறுமாம்


ஈழநாடு
வாரமலர் அளிக்கும்
சுவை மிகு கதைவிருந்து
படிக்கத் தவறுதீர்கள்!
வேறுபட்ட மனப்போக்கையுடைய
இரு பெண்களை
மையமாக வைத்துப் பின்னப்பட்ட
தொடர் நவீனம்
17-6-68
ஈழநாடு வாரமலரில் ஆரம்பமாகிறது


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டுஜூன் மாதம் 16-ந்திகதி அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org